முதல் பாசுரம்

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏராந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரயணனே நமக்கே பறை தருவான்
பரோர் புகழப் படிந்தேலோர் எம் பாவாய்

1.1 சேதனன் அறிய வேண்டியவை தத்துவ, ஹித, புருஷார்த்தங்கள்.

1.2 இதை நாராயணனே, நமக்கே, பறை என்றது.

1.3 ப்ரமாணங்கள் காட்டும் பர தத்துவம் நாராயணன் ஒருவனே.

1.4 நாராயண பரம் ப்ரஹ்ம. தத்துவம் நாராயணப் பர:
நாராயண பரம் ஜ்யோதி ஆத்மா நாரயண பர:
-நாராயண சுக்தம்
நாராயணன்தான் உயர்ந்த பரத்துவம்.

1.5 ஏகோ ஹவை நாராயண ஆஸீத்: ந ப்ரஹ்மா ந ஈசான:
-மஹோபனிஷத்
ப்ரளய காலத்தில் நாராயணன் ஒருவனே இருந்தான். பிரம்மாவும் இல்லை சிவனும் இல்லை என்று ஜகத் காரணத்வத்தை காட்டியது.

1.6 நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
தான்முகமாய் சங்கரனைத்தான் படைத்தான் - யான்முகமாய்
அந்தாதி மேலிட்டே அறிவித்தேன் ஆழ்பொருளைச்
சிந்தாமல் கொண்மின் நீர் தேர்ந்து
-நான்முகன் திருவந்ததி 1
அந்த ஸ்ருதி வாக்கியங்களை அமோதித்தார் திருமழிசைப்பிரான்

1.7 நாரணன் முழு ஏழுஉலகுக்கும் நாதன் வேதமயன்
காரணம் கிரிசை கருமம் இவை முதல்வன் எந்தை
சீரணங்கு அமரர் பிறர்பலரும் தொழுது ஏத்த நின்ற

வாரணத்தை மருபொசித்த பிரான் என் மாதவனே
-திருவாய்மொழி 2-7-2

என்று எம்பெருமானே ஸர்வ வஸ்துக்களுக்கும் தலைவன் என்றார்.

1.8 ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாஸ புராண முறையிலேயே நாராயணன் என்றே முதலில் அனுஸந்தானம் இங்கே.

1.9 எம்பெருமானாரும் ப்ரபத்தி ரூபமாய் நம்பெருமான் முன்னே கத்யத்தை விண்ணப்பிங்குகால் பகவந் நாராயண என்றே ஆரம்பித்தார்.

1.10 கார்மேனி அந்த நாராயணனின் திருமேனி கரிய மேகத்தை ஒத்தது.

1.11 நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா... ... ...
புருஷம் கிருஷ்ண பிங்களம்
- தைத்ரிய நாராயணவல்லீ

என்று எம்பெருமான் திருமேனி கருத்தது என்றது சுருதிகள். இந்நிறம் மற்ற தேவதைக்கோ மனுஷருக்கோ கிடையாது.

1.12 கரியவாகி புடை பரந்து மிளிர்ந்து
-அமலனாதி பிரான் 8

என்றார் நம் பாணன்

1.13 பகவானின் சுபாஸ்ரயமான திருமேனி பற்றியவருக்கு பரமானந்தத்தை அருளுவது ப்ரதி ப்ரயோஜனமன்றி பொழியும் மேகத்தைப்போலே (without any expectation in return)

1.14 இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனி அறிந்தேன் எம்பெருமான் உன்னை,
இனி அறிந்தேன் காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ,
நற்கிரிசை நாரணன் நீ நன்கு அறிந்தேன் நான்
-நான்முகன் திருவந்தாதி 96

என்கிறபடி நாராயணன் ஒருவனே ஸர்வேச்வரன். அவன்தான் ஆதி. மற்றை ப்ரம்ம ருத்ராதி தேவதைகள் இல்லை

1.15 ஓர் உருவம் பொன் உருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடல் உருவம் ஒத்த நின்ற

மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி
முகில் உருவம் எம் அடிகள் உருவம் தானே"
-திருநெடுந்தாண்டகம் 2

என்று திருமங்கை மன்னன், பர தத்வ விவாதத்திற்கு விஷயமான மூவரில் இருவரை நீக்கி எஞ்சிய ஒரு உருவம் நாராயணன் ஒருவனே என நிருபித்தார் ப்ரமாணங்களைக் கொண்டு. அவன் முகில் உருவம்.

1.16 பிரம்ம ருத்ராதிகளுக்கு கார்யத்வம், கர்மவச்யத்வம் உண்டு.

1.17 ஆக்கப்பட்ட காரியமே தவிர இவர்கள் ஆதி காரணமில்லை. (effect, not the cause. manufactured, not the raw material).

1.18 கர்ம வினையால் கட்டப்பட்ட அவர்களுக்கும் பலனை அளிப்பவன் எம்பெருமான் ஒருவனே.

1.19 யுக$_3$ கோடி ஸஹஸ்ராணி விஷ்ணும் ஆராத்$_4$ய பத்$_3$மபூ$_4$: |
புந ஸத் த்ரைலோக்யத$_4$ாத்ருத்வம் ப்ராப்த்வாநிதி ஶ்ரீஶ்ரும: ||
- பாரதம் 14-8

பல கோடி ஆயிரம் யுகங்கள் செய்த யாகத்தின் பலனால் ப்ரம்ம பதவியை மீண்டும் பெற்றான் சதுர்முகன்.

1.20 மாஹாதே$_3$வஸ் ஸர்வமேதே$_4$, மஹாத்மா ஹீ
த்வ ஆத்மாநம் தே$_3$வ தே$_3$வோ ப$_3$பூ$_4$வ:
- பாரதம்

ஸர்வமேத யாகத்தில் தன்னையே ஹோமம் செய்து தேவதேவன் ஆனான் சிவன்.

1.21 மனுஷ்யரைப்போல், மற்ற தேவதைகளின் பதவி, புகழ், ஆயுஸ் எல்லாம் கால வசப்பட்டது (time-stamped with an expiry date). அவர்தம் அறிவும், அருளும் ஓர் அளவே. (limited powers).

1.22 சடைமுடியன் சது முகன் என்று இவர் முதலாம் தரம் எல்லாம்,
அடைய வினைப் பயன் ஆகி அழிந்து விழும் படி கண்டு
- அடைக்கலப்பத்து 2

அந்தரத்தில் அமுங்கி கிடக்கும் அந்யதேவதைகளுக்கு அநந்த ஆனந்தமான மோஷத்தை அளிக்கும் அருகதை இல்லை. இது திருமழிசைப்பிரான் வைபவத்தில் கண்கூடு.

1.23 *க இதி ப்ராஹ்மணோ நாம ஈஶோऽஹம் ஸர்வதேஹிநாம் |*
ஆவாம் தாவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேஶவ நாமவாந் ||
- ஹரி வம்ஸம், விஷ்ணு பர்வா 134

க என்றால் பிரம்மன். ஈச என்பது எல்லா பிராணிகளுக்கும் இறைவன் நான். நாங்கள் இருவரும் உம்முடைய திருமேனியிலிருந்து பிறந்து உம் உடலிலேயே இருந்து வருவதால் உமக்கு கேசவன் என்ற பேர் என்றான் ருத்ரன்.

ஆக எம்பெருமான் நாராயணன் ஒருவனே ஸர்வ காரணகன், கர்மாக்கள் ஒட்டாதவன், ஸகல கல்யாண குணக் கடல், ஸர்வ ஸ்வாமி.

1.24 ப்ரம்ம, ருத்ர, இந்திர பதவியும், சக்தியும், அதிகாரமும் அளிப்பவன் எம்பெருமான் ஒருவனே. பகவான் ஒருவன்தான் ஆதிகாரணம், ஆராத்யன், அளிப்பவன். மற்ற யாவரும் காரியம், ஆராதனை செய்பவர், பலனைப் பெறுபவர்.

1.25 ப்ரம்ம ருத்ராதிகளும் ப்ரகிருதிக்கு அடிமையானதால் அவர்கள் ஞானம் ஸங்கோஜம் ஆகிறது. (அறிவின் விரிவும், சுருக்கமும்).

1.26 *வேத$_3$ாபஹார கு$_3$ருபாதக தை$_3$த்யபீடாதி$_3$*
ஆபத்$_3$ விமோசந மஹிஷ்ட$_2$ ப$_2$ல ப்ரத$_3$ானைகை
- ஸ்தோத்ர ரத்னம் - 13

படைப்பவனான பிரமன் வேதத்தை இழந்து, பரிதவிக்கும்போது மது கைடபர்களான பகைவரிடமிருந்து அதை மீட்டுக் கொடுத்த பர தத்துவம் பகவான்.

1.27 *பிண்டியார் மண்டையேந்தி பிறன் மனை திரிந்து உண்ணும்*
உண்டியான் சாபம் தீர்த்த ஒருவன் ஊர்
திருக்குறுந்தாண்டகம் - 19

தன் அப்பனும் ஆசாரியனுமாகிய பிரமனின் தலையை கிள்ளியதால் ஏற்பட்ட ப்ரம்மஹத்யா தோஷத்தை தீர்த்தவன் நாராயணன் ஒருவனே.

1.28 *தத்ர நாராயண: ஶ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித: |*
விஷ்ணு ப்ரஸாதாத் ஸ ஶ்ரோணி கபாலம் தத் ஸஹஸ்ரதா ||
என்றது மாத்ஸ்ய புராணம். கையில் ஒட்டியிருந்த கபாலம் வெடித்து சிதறியது எம்பெருமானிடம் யாசித்த பலனாலே.

பேச நின்ற சிவனுக்கும் பிரமனுக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே
கபால நன் மோக்கத்து கண்டு கொண்மீன்
திருவாய்மொழி 4-10-4

என்றார் நம்மாழ்வார்.

1.29 மூவரில் ஒருவனாய் நின்றாலும் மூவருக்கும் முதல்வன் முகில் வண்ணனே.

ஆத்ம ஐக்யம் தேவதைக்யம் த்ரிக ஸமதிகதா துல்யதைக்யம் த்ரயணாம்
அந்யத்ர ஐச்வர்யமித்ய ஆத்ய நிபுணபணிதீர ஆத்ரியந்தே ந ஸந்த: |
த்ரய்யந்தை: ஏக கண்டை: ததநுகுணம் அவ்யாஸ முக்யோக்திபிஸ்ச
ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகில தநு: முக்திதோ முக்தபோக்ய: ||
- ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்

எம்பெருமான் லக்ஷ்மி விசிஷ்டனான நாராயணன் ஒருவனே பரதேவதை. இது எல்லா ப்ரமாணங்களும் ஒப்புக்கொண்ட கருத்து என்றார் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில்.

1.30 ஸ்ருஷ்டி ஸ்தி$_3$யந்த கரணீம் ப்$_3$ரஹ்ம விஷ்ணு ஸிவாத்மிகாம் |
ஸ ஸம்ஞாம் ஆதி ப$_4$க$_3$வாந் ஏக ஏவ ஜநார்த்தந: ||
- ஸ்ரீவிஷ்ணுபுராணம்

எம்பெருமான் ஒருவனே ஆக்கி, அளித்து, அழிக்கும் தொழிலுக்கு ஏற்ற ப்ரம்ம விஷ்ணு சிவ நாமங்களை கொள்கிறான்.

1.31 முழுமையான திருமேனியைச் சொல்வது வேணுமோ? அன்று அலர்ந்த தாமரையாய் இருக்கும் செங்கண் என்னும் திருக்கண்கள் ஒன்றே போதுமே இவனை நாராயணன் என்று காட்ட.

1.32 தஸ்ய யதா கப்யாஸம் பூண்டரீக ஏவம் அக்ஷிணி
- சாந்தோக்ய உபனிஷத்

சூரியனால் மலர்ந்த தாமரை போல் அவன் திருக்கண்கள் என்று ஸ்ருதியும் பரத்துவ நிர்ணயம் செய்தது.

1.33 அடியாருக்கு புனலுருவாயும். படியாதாருக்கு அனலுருவாயும் உள்ள கதிர் மதியம் போல் முகத்தான்.

1.34 சார்ந்தவருக்கு சந்திரனின் இனிமையும் பகைவருக்கு பகலவனின் வெப்பமும் தரும் சந்திர சூர்யனை ஒத்த திருக்கண்கள்.

1.35 நாராயண சப்தத்தால் ஜகத் காரணகத்தை சொல்லி அவனுடைய திருமேனியைச் சொல்லி அவன்தான் பரத்துவம் என்பதை

"கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நாராயணன்" என்பதில் நிர்ணயித்தது.

1.36 பரத்வ நாராயணனைச் சொல்லுங்கால் திருமேனியைச் சொன்னது உபாயபூதனான எம்பெருமான் நிர்குண, நிர்விசேஷ ப்ரம்மம் அன்றி. திவ்ய மங்கள விக்ரஹம் உடையவன் என்பதை தெளிவிக்கவே. *நாராயணனை சொன்ன இடமெல்லாம் பிராட்டியையும் சொல்லிற்றாம் ஆயிற்றே* என்பதால் ப்ரமாணங்கள் சொல்வது திருநாரணன், ஸ்ரீமந் நாராயணனே.

1.37 *நமக்கே* அந்த பரத்துவத்தினிடத்தில் சரணாகதி செய்யும் சேதனர்களாகிய நாம்

1.38 *யோ ப்3ரஹ்மாணம் வித3த4ாதி பூர்வம்*
யோ வை வேத3ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை |
தம் ஹ தே3வ ஆத்ம பு3த்தி4 ப்ரஸாத3ம்
முமுக்ஷுர் வை ஶரணம் அஹம் ப்ரபத்3யே ||

-ஶ்வேதாஸ்வர உபனிஷத்

எவன் பிரமனை முதலில் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்தானோ அந்த தேவனை, ஞானத்தை பிரகாசிப்பவனான அவனிடத்தில் மோக்ஷத்திற்காக செய்யும் சரணாகதி

1.39 *நாராயணனே* இங்கு ஏகாரம் பகவான் ஒருவனே ஸர்வரக்ஷகன் என்பதை காட்டுகிறது (Sole protector for everyone)

1.40 *தை3வீ ஏஷா கு3ணமயீ மம மாயா து3ரத்யயா |*
மாம் ஏவ யே ப்ரபத்3யந்தே மாயாம் ஏதாம் தரந்திதே

பகவத் கீதை 7-14

என்னையே சரண் அடைந்தவரை நான் இந்த மாயை என்னும் ப்ரகிருதியிலிருந்து விடுவிக்கிறேன் என்றான் கண்ணன்

1.41 ப்ரம்மாஸ்திரத்தைக் கண்ட சணல் கயிறு விலகுமாப்போலே, மற்ற உபாயங்கள் விலகுவதை காட்டுகிறது இதில் உள்ள ஏகாரம்.

1.42 நாராயண பதம் பல பொருளைக் கொண்டாலும் பரத்துவம், உபாயம் என்பது இங்கு நமக்கு அபேக்ஷிதம்.

1.43 *உன்னால் அல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்*

- திருவாய்மொழி 5-8-3

அந்த ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு யாரையும் வேண்டேன் .

1.44 *நராத் ஜாதாநி தத்வாநி நாராணீத்யுச்யதே புதை:*

நரன் என்னும் எம்பெருமானிடமிருந்து உண்டான அனைத்தும் நாரங்கள்

நர ஸம்பந்ததீ நி நாராணி

நரன் என்ற எம்பெருமானின் ஸம்பந்தம் கொண்ட எல்லாப் பொருள்களும் நாரங்கள் என்பதால் காரணத்வம் சொல்லிற்று..

1.45 அயன சப்தத்தில் *ஈயதே அநேந* என்னும் கரண வ்யத்பத்தி இவனால் பலன் அடையப் படுகிறது என்கிறதால், பலனைப் பெற இவன் உபாயம் என்பது தெளிகிறது. நாரங்களுக்கு தன்னையே காட்டிக் கொடுக்கும் ஸித்தோபாயமான நாராயணனைச் சொன்னது.

1.46 *நார ஸப்தே தேந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை: கதிராலம்பநம் தஸ்ய தேந நாரயண: ஸ்ம்ருத:*

என்று நாரம் என்னும் ஜீவ சமூகத்திற்கு வழியும் பலனும், உபாய உபேயமும், சாதன ஸாத்யமும், ஆறும் பேறுமாகவும் எம்பெருமான் இருப்பதால் அவனை நாராயணன் என்றது பாத்மோத்தரம்.

1.47 ஆக, நாராயண பதத்தில் நார என்பது பரத்வத்தையும், அயன என்பது உபாயத்தையும் சொன்னது.

1.48 *எருத்துக் கொடியானும் பிரமனும் இந்திரனும்*
இப்பிறவி என்னும் நோய்க்கு மருந்து அறிவார்களோ

- பெரியாழ்வார் திருமொழி 5-3-6

என்கிறபடி பிரபன்னர்களுக்கு பலனை அருளுபவன் இவன் ஒருவனே.

1.49 *சிறுமீர்காள்* என்பது பகவானிடத்து நமக்குள்ள அடிமைத் தனம். அநந்யார்ஹ சேஷத்வ பாரதந்த்ரியம்.

1.50 அடக்கும் ஆண் வர்க்கம் அல்லாது அடங்கும் ஸ்தீரிரூபமாக சொன்னது சேஷத்வ பாரதந்திரியத்தை காட்டவே.

1.51 அஹங்கார மமகாரங்களை உடைய ஆண்களன்றி, மற்ற தெய்வங்களைத் தொழும் மணமான பெண்களன்றி அநந்ய ப்ரயோஜனரான, அந்நய கதியரான சிறுமிகளைச் சொன்னது.

1.52 *செல்வச் சிறுமீர்காள்* என்பது ஞானமாகிய செல்வத்தோடு ப்ரகாசிக்கும் பாரதந்திரியர்கள்.

1.53 செல்வம் எல்லாம் துறந்த *லக்ஷ்மணோ லக்ஷ்மீ ஸம்பந்ந:* என்கிறபடி கைங்கர்ய லக்ஷ்மி உடைய லக்ஷ்மணனைப் போலே.

1.54 ஸகலத்தையும் துறந்து எம்பெருமானை சரண் அடைந்த. *அந்தரிஷ கதஶ் ஶ்ரீமாந்:* எனப்பட்ட ஶ்ரீவைஷ்ணவ ஶ்ரீயை உடைய விபீஷணன் போலே.

1.55 சுய முயற்சி சுகமில்லை என அறிந்து
ஸ து நாக வர: ஶ்ரீமாந் நாரயண பராயண:
- விஷ்ணு தர்மம்
என்று அழைக்கப்பட்ட கஜேந்திரன் போலே.

1.56 அநந்ய கதியராய், அநந்ய ப்ரயோஜனரான அவர்தாம் செல்வச் சிறுமீர்.

1.57 சிறுமிகள் என்பதால் ஞானம் பூர்ணத்வமில்லை.

1.58 தேவையற்றதில் பூர்ணமா அபூர்ணமா என்ற கேள்வி தேவையற்றது. இதையே *"சோம்பரை உகத்தி போலும்"* என்றார் தொண்டரடி-ப்பொடி

1.59 *செல்வச் சிறுமீர்காள்* என்னும்போது சிறுமிகளுக்கு ஏது செல்வம் என்றால் அது பரம்பரையான சொத்து.

1.60 இங்கே பரம்பரை என்பது வழிமுறையாக ஆசாரியர்கள் ப்ரபன்னர்களுக்கு அளித்த சொத்து. அது பகவத் ஸம்பந்தம் ஒன்றே ஆத்மாவிற்கு ஐஸ்வர்யம் என்னும் ஞானமாகிய செல்வம்.

1.61 அந்த அற்புத பகவானின் பரத்துவத்தையும் ஸௌலப்யத்தையும் அறிந்து அவன் திருவடிகளிலேயே அடிமை என்று ஸாத்யோபாயமாக பற்றும் ப்ரபன்னர்களை **நமக்கே** என்றாள்.

1.62 பறை எவருக்கும் அளிக்க வல்லமை இருப்பினும், கருணை கரை புரண்டோடினும் பகவான் உபாயத்தைக் கொண்டே பலனை அளிக்கிறான். (Lord is discriminatory and awrads only those who have performed the required means)

1.63 காத்துக் கிடந்து, கனிந்த காயை ருசிப்பது போலே கேட்டுப் பெறுவதிலே இன்பம்.

1.64 பலனுக்கு, உபாய அனுஷ்டான அவசியத்தாலும், பக்தி யோக அசாத்யத்தாலும் ப்ரப்த்தி ஒன்றே எளிதானது. அதை அச்யுதன் அடிகளில் அனுஷ்த்த நமக்கே.

1.65 எல்லார்க்கும் எளிதான ஏற்றத்தாலும்,
இனி உரைக்கை மிகையான இரக்கத்தாலும்
சொல் ஆர்க்கும் அளவாலும் அமைதலாலும்
துணிவு அரிதாய் துணை துரக்கும் சுகரத்தாலும்
கல்லார்க்கும் கற்றார் சொல் கவர்தலாலும்
கண்ணன் உரை முடிசூடி முடித்ததாலும்
நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம்
நாரணற்கே அடைக்கலமாய் நணுகுவீரே
- பரமதபங்கம் 47

என்று ப்ரபத்தியின் எளிமையும் அதன் உயர்த்தியும் தேசிகன் ஸாதித்ததைக் கண்டு கொள்வது.

1.66 நமக்கே என்பதில் உள்ள ஏகாரம் கைம்முதல் அற்ற கிங்கரர்கள் நாம் என்பதை காட்டுகிறது

1.67 ஆகிஞ்சன்ய, அநந்ய கதித்வத்தை கொண்டு
ந த$_4$ர்ம நிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ $_3$ ந ப$_4$க்திமாந் என்றும்
-ஸ்தோத்ர ரத்னம் 22
நின் அருளாம் கதி இன்றி மற்று ஒன்று இலேன்
- அமிருதஸுவாதினி 31

என்றும் செய்த சரணாகதி.

1.68 அடைக்கலம் அருள, பகவானிடத்து மேன்மையுடன் எளிமையும் அவசியம். (Supremacy is necessary but not sufficent condtion).

1.69 ஸௌலப்யம் இருந்து பரத்வம் இல்லையாயினும் சரணாகதிக்கு ப்ரயோஜனமில்லை.

1.70 ஆதி மூலமே என்ற கஜேந்திரன் அலறலுக்கு *நாஹம் நாஹம்* என்று நகர்ந்தவரிடம் பரத்துவமில்லை.

1.71 **சீர்** என்பது *ஸ்வாபாவிக அநவதிக அதிசய .... அஸேங்கேய கல்யாண குண கணாம்* என்னும் எம்பெருமானின் எண்ணற்ற திருக்கல்யாண குணங்கள்.

1.72 *ஏழை ஏதலன் கீழ்மகன் என்று என்னாது இரங்கி*
மற்றவருக்கு இன்னருள் சுரந்து
-பெரிய திருமொழி 5-8-1
என்னும்படி உயர்ந்த வைகுண்டத்தை பிரிந்து
ஸகல மநுஜ நயந விஷயாந்தர
- கீதா பாஷ்யம்
என்று லீலாவிபூதியில் எல்லோரும் அனுபவிக்க தன்னையே தந்த கற்பகமான கண்ணன் அவதரித்த *சீர் மல்கும் ஆய்ப்பாடி.*

1.73 *ஏஷ நாராயண ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:*
நாக பர்யங்க உத்ஸ்ருஜய ஹ்யாகதோ மதுராம் புரிம்
- ஹரி வம்ஸம்
பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரமன் பைந்நாகப்பாயை விட்டு பாவைகளுக்கே என வந்து அவதரித்த *சீர் மல்கும் ஆய்ப்பாடி.*

1.74 அகலவன் அருகே அகல் விளக்கு போலே பரமபத்தில் பிரகாசிக்காத பகவானின் குணங்கள் இருள் தருமா ஞாலத்தில் பிரகாசிக்கும் *சீர் மல்கும் ஆய்ப்பாடி.*

1.75 வைகுண்டத்தில் மேன்மை ஒன்றே தவிர ஸௌஸீல்யம், ஸௌலப்யம், காருண்யம், வாத்ஸல்யம் போன்ற குணாதிசயங்களுக்கு இடமில்லையென அவற்றை காட்ட வேண்டும் என அவதரித்த *சீர் மல்கும் ஆய்ப்பாடி.*

1.76 *முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டு உண்ணும் **

முகிழ் இளஞ்சிறுத் தாமரைக் கையும் *
எழில்கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கும்
நிலையும் * வெண் தயிர் தோய்ந்த செவ்வாயும் *
அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் *
அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும் *
தொழுகையும் இவை கண்ட அசோதை *
தொல்லை இன்பத்தின் இறுதி கண்ட
-பெருமாள் திருமொழி 7-8

பூலோகத்தில், அதுவும் ஆயர்பாடியில் அவனுடைய ஸௌலப்யம்.

1.77 குன்றினால் குடை கவித்ததும் * கோலக்
குரவை கோத்ததும் குட மாட்டும் *
கன்றினால் விளவு எறிந்ததும் * காலால்
காளியன் தலை மிதித்ததும் முதலா *
-பெருமாள் திருமொழி 7-9

என்று ஆயர்பாடியில் ஸௌலப்யம்

1.78 ராமனுடைய குணவசீகரத்தைவிட கண்ணனின் வம்புகளைக் கண்டு உகக்கும் ஊர். அதனால் கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி இளஞ்சிங்கம் கன்னன் அவதரித்த சீர் மல்கும் ஆய்ப்பாடி.

1.79 ஸதா பஶ்யந்தி ஸூரய என்று நித்ய ஸூரிகள் பகவானை ஸதா ஸர்வ காலமும் கண்டு களிப்பது போல இவள் தன் பிள்ளையின் அழகையும் அழுகையும் கண்டு மகிழ்ந்த கண்களை உடைய ஏரார்ந்த கண்ணி யசோசைக்கு ஸௌலப்யம்.

1.80 பொய் நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும்
இன்னின்ற நீர்மை இனி யாம் உறாமை. உயிர் அளிப்பான்
எந்நின்ற யோனியுமாய் பிறந்தாய் இமையோர் தலைவா
- திருவிருத்தம் 1

என்கிறபடி ஆயர்பாடியில் வந்து பிறந்தான்.

1.81 பிறவாமை நாம் பெறவே அவன் வந்து பிறந்தானே!
இரக்கத்தால் இறங்கியதும் அவன் எளிமையின் ஏற்றமே.

1.82 பறை என்பது உனக்கே நாம் ஆட் செய்வோம் என்ற நித்ய கைங்கர்யத்தை சொன்னது.

1.83 *சரணம் நாரயண:* என்று சூபால உபனிஷத்தும்.
நாராயணம் பராயணம் என்று அவன்தான் மேலான உபாயம் என்றது நாராயண அனுவாகமும்
நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு என்றது பிரபந்தமும்.

1.84 *ஆரோக்3யம் ப4ாஸ்கராதி 3ச்சே2த் த4நமிச்சே2த் ஹீ தாஶநாத் |*
ஈஸ்வராத் ஜ்ஞாநமிச்சே2த் மோக்ஷம் இச்சே2த் ஜநார்த3நாத் ||
- மாத்ஸ்ய புராணம்
மோக்ஷத்தை அளிக்கும் வல்லமை உடையவன் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே.

1.85 நாராயணன் ஒருவனே பரத்துவம் என்ற ஸ்ருதி, ஸ்மிருதி, இதிஹாச, புராணங்களின் கருத்தையே வேதம் அனைத்துக்கும் வித்தாகிய திருப்பாவை காட்டியது.

1.86 தத்துவ ஹித புருஷார்த்தங்களை அறிந்து பகவானையே சரணாகதி என்னும் பற்றும் ப்ரபன்னர்கள் அடையும் நித்ய கைங்கர்யமே *"பறை"* .

1.87 *நீராடப் போதுவீர் போதுமினோ நேர் இழையீர்* என்று நோன்பு என்ற வ்யாஜத்தினால் ப்ரபன்னர்களை எம்பெருமானை அனுபவிக்க வாரும் என்று கூவி அழைக்கிறாள்.

1.88 *நேர் இழையீர்* என்பது ப்ரபன்னர்கள் பகவத் அனுபவத்திற்கு இணங்க அணியும் ஆத்மகுண ஆபரணங்கள்.
அமாநித்வம் அதம்பித்வம் அஹிம்ஸா க்ஷாந்தி ஆர்ஜவம் |
ஆசார்ய உபாஸநம் ஸௌஸம் ஸ்தைர்யம் ஆத்ம விநிக்ரஹ: ||
- பகவத் கீதை 13.7 -13.11
என்று கீதாசாரியன் சொன்னாற் போலே.

1.89 ப்ரபத்தியையே ஆபரணமாக அணிபவர்கள். பகவக் பாகவத கைங்கர்யமே ப்ராப்யம் என்ற பூஷணத்தை அணிந்த ப்ரபன்னர்கள்.

1.90 *வித4யஶ்ச வைதி3காஸ் த்வதீ3ய க3ம்பீ4ர மநோநு ஸாரிண:*
- ஸ்தோத்ர ரத்னம் 20

என்று வேதமே அடியார் பின் போவதால் மீதி ஊராரைச் சொல்லவும் வேணுமோ? *பாரோர் புகழ*

1.91 *மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்,* என்று மாதங்களில் நான் மார்கழி என்ற கீதாசாரியன் வாக்காகிய வைஷ்ணவ மாதம் *மார்கழி.*

1.92 *மார்கழித் திங்கள்* அடைக்கலம் அடைந்த அடியவர்கள் ஆசார்ய அருளுரையாலும், சாஸ்திர விதிமுறையாலும் எம்பெருமானை அறிந்து அனுபவிக்கும் மீதி வாழ்க்கை நாட்கள் விடியற்காலை போலே.

1.93 *ஸதாசார்ய பரிக்ரஹத்துக்கு முன்புள்ள அநாதி காலம் எல்லாம் ஒரு காள ராத்ரி. பின்பு தேஹாவஸானத்தளவும் நல்விடிவு. மேல் முழுக்க ஸ்வச்சசந்த கைங்கர்ய மஹோத்ஸவ திவஸம்*

- ரஹஸ்ய ரத்நாவளி

என்றார் ஸ்வாமி தேசிகன்.

1.94 அர்த்த ராத்ரியான சேதனனின் அறிவு, ஆசார்ய அருளாலே நல் விடிவாய் மலர்ந்து அந்திமகாலத்தின் பின் பட்ட பகலாய் பிரகாசிக்கும்.

1.95 உத்தராயண காலத்திற்கு முன் உள்ள தக்ஷிணாய கடைசி மார்கழி. அது தேவர்களுக்கு தெளிவு பிறக்கும் விடியற்காலம்.

1.96 *மதி நிறைந்த நன்னாள்* பகவத் அனுபவத்தை அடையப் போவதால் சந்திரன் நிறைந்து இருக்கும் நாளை கொண்டாடுகிறார்கள். மாதம்போல் இவர்களுக்கு பக்ஷமும் சாதகமாய் அமைந்தது.

1.97 தத்வ ஹித புருஷார்த்தங்களை அறிந்த ப்ரபன்னர்கள் பூலோகத்தில் பகவத் அனுபவமாக கழிக்கும் மீதி நாட்களை *மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாள்* என்று சொன்னது.

1.98 அஞ்சு லக்ஷம் குடியில் உள்ள ப்ரபன்னர்களின் முகம் எல்லாம் தேஜஸுடன் பூர்ண சந்திரனை ஒத்திருப்பதால் நன்னாள்.

1.99 நீராடப் போதுவீர் பகவான் என்னும் நீர்த்தடாகத்தில் இறங்கி பகவத் அனுபவத்தில் மூழ்கி அந்த எம்பெருமானையே அனுபவிக்க, அடியவர்களே வாரும் என்னும் அழைப்பு.

1.100 செந்தாமரை தடங்கண் செங்கனி வாய் செங்கமலம்
செந்தாமரை அடிகள்
- திருவாய்மொழி 2-5-1
கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்
- திருநெடுந்தாண்டகம் 18
கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே
வண்ணம் கரியதோர் மால்வரை போன்று
- திருவிருத்தம் 43
கண்ணும் கமலம் கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும் மற்றவையே
- மூன்றாம் திரு வந்தாதி 9
கை வண்ணம் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணினையும் அரவிந்தம் அடியும் அஃதே
- திருநெடுந்தாண்டகம் 31
என்றும் தாமரை பூத்து குலுங்கும் கண்ணன் என்னும் தாமரைத் தடாகத்தில் நீராட விருப்பம்.

1.101 முற்றாரா வன முலையாள் பாவை * மாயன்
மொய்யகலத்து உள்ளிருப்பாள் அஃதும் கண்டும்-
அற்றாள் *தன் நிறை அழிந்தாள் ஆவிக்கின்றாள் *
அணியரங்கம் ஆடுதுமோ தோழி! என்னும் /
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள்*
பேர் பாடி தண்குடந்தை நகரும் பாடி *
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள் *
பொருவற்றாள் எம்மகள் உம் பொன்னும் அஃதே
- திருநெடுந்தாண்டகம் 19
என்று பரகால நாயகியின் தாயார் அவள் தாமரைத் தடாகத்தில் நீராடாப் போனதை சொல்வது போலே

1.102 ஏஷ ப்ரஹ்ம பரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவா ஹ்ரதம்
- மஹாபாரதம்
கோடைக் காலத்தில் குளிர்ந்த மடுவில் நுழைவதுபோலே ப்ரம்மத்தின் உள் நுழைந்தேன் நான் என்னும் ஸ்ருதிக்கேற்ப கண்ணனை பிரிந்த விரக தாபத்தாலே குளிர் காலமும் கோடை ஆயிற்று. அத்தாலே அதிகாலையில் நீராட்டம்.

1.103 *போதுவீர் போதுமினோ* ஏற்கனவே ஆவல் மிகுந்து இருக்கும் ப்ரபன்னர்களை வாரும் என்ற ஞாபகப்படுத்தும் அழைப்பு.
கூடும் மனம் உடையீர் வரம்பொழிவந்தொல்லைக் கூடுமினோ
- திருப்பல்லாண்டு 4
என்ற தந்தையின் வாக்கை பின்பற்றி

1.104 *மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்*
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆய்ப்பாடி செல்வச் சிறுமீர்காள்
என்பதால் ப்ராப்ய பலன் முதலில் அனுஸந்தானம்.
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாரயணனே நமக்கே
என்பதால் ப்ராபகமான உபாய அனுஸந்தானம்.

1.105 கீதை முழுவதும் கேட்டு எம்பெருமான் திருவாக்காலேயே அவன்தான் *உபாயம்* என்பதை அர்ஜீனன் காட்டினான். உயர்ந்த *பலனா*கிய எம்பெருமான் அனுபவத்தை பாரதந்திரியத்தால் பரதன் காட்டினான். இரண்டையும் இங்கே முதல் பாசுரத்திலேயே பார்க்கலாம்.

1.106 *நாராயணனே* என்பதால் ஈச்வர தத்துவத்தையும் அவனே உபாயம் என்பதையும், *நமக்கே* என்பதால் ஜீவாத்ம ஸ்வரூபத்தையும், அது செய்யும் தடைகளையும், *பறை* என்பதால் புருஷார்த்தத்தையும், ஆகிய அர்த்த பஞ்சகம் இங்கே சூசகம். அர்த்த பஞ்சகம் என்பது YAHOO (**Y**ou **A**ccess **H**im with an **O**bjective without any **O**bstacle).

1.107 *நாராயணனே நமக்கே பறை தருவான்* என்பதால் அகாரவாச்யனான நாராயணன் மகாரவாச்யனான ஜீவனுக்கு உபாய அனுஷ்டானங்களை அருளி உயர்ந்த பலனையும் அருளுவான் என்று திருமந்திரம் இங்கே தெளிவு.

1.108 பரத்துவம், ஸௌலப்யம், கல்யாண குணங்கள், திவ்ய திருமேனியும் உடைய *ஸ்ரீ*மந் நாராயணனிடம் அகிஞ்சனராய் அநந்ய கதியராய் ப்ரபத்தி உபாயமாய் பற்றி க்ஷுத்ர பலனை

யாசிக்காது மஹா புருஷார்த்தமாகிய மோக்ஷ பலனை வேண்டும் ப்ரபன்னர்களை அந்த எம்பெருமானின் குணங்களை அனுபவிக்க வாரும் என்று பொருள்.